# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 16 ஆகஸ்ட




வெளியிடுவோர்


**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

தமிழ்நாடு. இந்தியா

☎04257-230030, 230382. Cell : 98427 - 30382

E-mail : kangayamcofc@eth.net




## ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 1 |
| 2. | எக்லீசியா வேதாகமக் கல்லூரி சேர்க்கை | 9 |
| 3. | தேவனிடத்தில் விசுவாசம் | 10 |
| 4. | ஆறாம் வேதாகம கருத்தரங்கம் | 13 |
| 5. | பெண்கள் பகுதி | 14 |
| 6. | வாலிபர் பகுதி | 19 |
| 7. | சிறுவர் பகுதி | 22 |
| 8. | தேவனுடைய பரிசுத்த ஆவியை ... | 24 |
| 9. | திருமறை தியானம் தொலைக்காட்சி.. | 28 |
| 10. | தேடி வந்த தெர்த்துல்லு | 29 |
| 11. | நடப்புச் செய்திகள் | 32 |

THIRUMARAI AASAAN

PUBLISHED BY CHURCH OF CHRIST

Editor
S. Rajanayagam

Honorary Editor
J.C. Choate

Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol.16 August- 2003 Issue-8

ஆசிரியர் உரை

# "செர்கியு பவுல்"

இம்மாதத்திற்கான தலைப்பைப் பார்த்த மாத்திரத்தில் உங்கள் உள்ளத்தில் எழும் கேள்விகளை என்னால் உணர முடிகிறது. ஆம், பேதுருவை அறிவோம், யோவானையும் தெரியும், பவுலைப் பற்றிய பரிச்சயமும் உண்டு, பர்னபாவையும் கூட கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், இந்த **செர்கியு பவுல்** யார் என்று கேட்கிறீர்கள்? அப்படித்தானே! இப்படி நீங்கள் சிந்திப்பதும் கேட்பதும் எப்படி இருக்கிறது தெரியுமா? பொல்லாத ஆவிகள் பிடித்தவர்கள் கேட்டது போல் இருக்கிறது! வாசகர்களாகிய உங்களை பொல்லாத ஆவி பிடித்தவர்கள் என்று நான் சொல்லுகிறதாக தயவு செய்து எண்ணிவிடாமல், தொடர்ந்து படியுங்கள். இப்படி நான் சொல்வதற்கு ஆதாரமாக ஒரு சம்பவத்தை நினைப்பூட்டுகிறேன். **அப்போஸ்தலர் 19ம் அதிகாரத்தில்,** பவுலின் கைகளினால் தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தபடியால் **பொல்லாத ஆவிகள்** அவர்களை விட்டுப் புறப்பட்டன. இதைக் கண்ட தேசாந்திரிகளாய்த் திரியும் மந்திரவாதிகளில் சிலர், குறிப்பாக, பிரதான ஆசாரியனாகிய ஸ்கேவா என்னும் ஓர் யூதனுடைய ஏழு குமாரர் இயேசுவின் நாமத்தைச் சொல்லத் துணிந்து, இயேசுவின் பேரில் ஆணையிட்டார்கள். **பொல்லாத ஆவி அவர்களை நோக்கி, இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார்?** என்று சொல்லி அவர்களை விரட்டியடித்தது. கிட்டத்தட்ட இப்படித்தானே நாம் நினைத்தோம்.

சரி, இந்த செர்கியு பவுல் உங்களுக்கு மாத்திரம் அந்நியன் அல்ல. கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்கின்ற மிகப் பெரும்பாலோருக்கும் இவன் அந்நியனாகவும், அறியப்படாதவனாகவுமே இருக்கிறான். அப்படியானால், இவனைப் போன்றவர்கள் அறியப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம்? கூட்டத்தோடு சேர்ந்து கோவிந்தா போடும் சந்ததியிலிருந்து நாம் வந்துள்ளபடியால், அதன் தாக்கம் இன்னும் நம்மை விட்டு நீங்காமல் இருப்பது காரணமா? அல்லது காரண காரியம்

தெரியாமல் குறிப்பிட்டவர்களுக்கு மாத்திரம் "ஜே" போடும் நம்முடைய சமுதாயப் பழக்கம் நம்மையும் பாதித்துக் கொண்டிருப்பது காரணமா? அல்லது பெரும்பான்மைக்கு சத்தமில்லாமல் சரணடையும் நம்முடைய பழைய குணம் நம்மை விட்டு மறையாமல் இன்னும் தொற்றிக் கொண்டிருப்பது காரணமா? சொல்லுங்கள். எதுதான் காரணம் என்று! இவைகள் எதுவுமே காரணமில்லையென்றால், ஆவியானவரால் வேதாகமத்தின் பக்கங்களில் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருக்கும் செர்கியு பவுல் போன்றவர்களை நாம் ஏன் கண்டுகொள்ளாமல் இருக்கிறோம்? சர்வவல்லவரால், கோடிட்டுக்காட்டப்பட்டிருக்கும் செர்கியு பவுல் போன்றவர்களை "அவர்கள் கிடக்கட்டும்" என்று அலட்சியப்படுத்துவது எப்படி நியாயமாகும்? பாரபட்சம் இல்லாத பரலோக தகப்பன், அவரால் வெளிப்படுத்தபட்டவர்களிடம் நாம் இப்படி கடுமையாக பாரபட்சம் காட்டுவதை ஏற்றுக் கொள்வாரா? சொல்லுங்கள்.

ஒருவேளை, வேதாகமத்தின் பக்கங்களில் பளிச்சென்று மின்னும் சிலரைப் பொறுக்கியெடுத்து அவர்களைப் பற்றி அடிக்கடி பேசுவதையும், எழுதுவதையும் பிரசங்கிப்பதையும் நான் குறையாகச் சொல்லவில்லை. அம்மாமனிதர்களுக்கு அதற்கேற்ற தகுதி முற்றிலும் இருக்கிறதென்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆனால், ஆவியானவரால், அழகாக எடுத்துரைக்கப்பட்டு மிக நேர்த்தியாக வர்ணிக்கப்பட்டிருக்கும். செர்கியு பவுல் போன்றவர்களை, நாம் வாழும் காலமெல்லாம் ஒதுக்கி வைப்பதும், அவர்கள் ஒருமுறை கூட எடுத்துப் பேசப்படுவதற்கு அருகதையற்றவர்களென்று பாரமுகமாய் இருப்பதும், அவர்களுக்குள் பதுங்கியிருக்கும் பண்புகளை படித்துப் பாராட்டாமல் விலகி நிற்பதும் எப்படி நீதியாகும்? நாம் சத்தியத்திலே முழுமை பெறுவதற்கும், ஆவியிலே வளர்வதற்கும் இப்போக்கு சரியாக இருக்குமா? நிச்சயமாக இருக்காது தானே.

ஆகவே, தமிழ் கிறிஸ்தவ உலகத்தில் இப்படிப்பட்ட தவறுகள் தொடரக் கூடாதென்பதற்காகவே **திருமறை ஆசான்** தனது தலையங்கப் பகுதியில் வருடத்திற்கு ஒருமாதத்தை ஒதுக்கி வருகிறது. கடந்த ஒன்பது வருடங்களாக உங்களுக்காக இவ்வேலையை நாங்கள் கவனத்துடன் செய்து வருகிறோம். **கேட்பாரற்றுக் கிடந்தவர்களை எடுப்பானவர்களாக** மாற்றி உங்கள் கண்முன் நிறுத்தி வருகிறோம். நீங்களும் அவர்களை ஆரத்தழுவி, வரவேற்று மனமார பாராட்டி வருகிறீர்கள்.

ஒருவேளை, உங்களால் அப்போதைக்கு மெச்சப்பட்டவர்களை நீங்கள் மீண்டும் மறந்திருக்க வாய்ப்புள்ளதால், அவர்களை மீண்டும் ஒருமுறை உங்களுக்கு நினைவுபடுத்துகிறோம். அவர்கள் **1 "சம்மா"** (2.சாமு.23;11,12) **2. "பர்திமேயு"** (மாற்கு 10; 46, 48) **3. "ஒநேசிப்போரு"** (1. தீமோ.1: 16-18) **4. "சீகார் ஊரார்"** (யோவான்.4;1-5) **5. "காயு"** (3 யோவான்.1-6) **6. "நாலு பேர்"** (மாற்கு 2:3) **7. "தீகிக்கு"** (எபே.6:21) **8. "எப்பாப்பிரா"** (கொலோ. 1: 7 4: 12) **9. "எபூசியனாகிய அர்வனா"** (2. சாமு. 24; 15-25). இச்சிறியோரின் வரிசையில் தன்னையும் இவ்வருடம் இணைத்து தனக்கென ஒரு இடத்தை பிடித்துக் கொள்ளத் துடித்துக் கொண்டிருப்பவர் தான் அதிபதி செர்கியு பவுல் (அப். 13 : 7-12).

இந்த அதிபதி செர்கியு பவுலை நமக்கு ஆசானாக்குவதற்கு முன்பாக, அதாவது நமக்கு சில பாடங்களைக் கற்றுக் கொடுக்க அழைப்பதற்கு முன்பாக, அவனைப் பற்றிய சில பின்னணித் தகவல்களைப் பெற்றுக் கொள்வோம்.

அப்போஸ்தலனாகிய பவுல் **மூன்று** முழுமையான நற்செய்திப் பயணங்களை மேற்கொண்டதை நாம் நன்றாக அறிவோம். **முதல் பயணம்,** சீரியா **அந்தியோகியாவில்** தொடங்கி குறுகிய வட்டத்துடன் தொடங்கிய இடத்திலேயே முடிகிறது (அப்.13:4-14:28) **இரண்டாவது பயணம்,** அதே **அந்தியோகியாவில் தொடங்கி,** எதிர்த்திசையின் எல்லைப் பட்டணமான பெரோயா வரைக்கும் சென்று, எருசலேம் வழியாக, அதே **அந்தியோகியாவில்** நிறைவடைந்தது (15:36-18:22). **மூன்றாவது பயணம்,** கிட்டத்தட்ட அதே பாதையில் சென்று, **எருசலேம் வந்து சேர்ந்தது** (18 : 23-21 : 24). இம்மூன்று பயணங்களில், முதல் பயணத்தின் ஆரம்பக் கட்டத்தில், பர்னபாவும் பவுலும் புதிய அனுபவத்துடன் செலுக்கியா பட்டணத்தில் வந்து, கப்பல் ஏறி சீப்புருதீவுக்குப் போனார்கள். அங்கிருந்து சாலமி பட்டணத்துக்கு வந்து எதிர்ப்பில்லாமல் தேவ வசனத்தைப் பிரசங்கித்தார்கள். ஆனால், சீப்புருதீவின் தலைநகரப் பட்டணமாகிய **"பாப்போ"** வுக்கு வந்தபோது, **பர்யேசு** என்னும் பேர்கொண்ட **மாயவித்தைக் காரனும், கள்ளத் தீர்க்கதரிசியுமான** ஒரு யூதனைக் கண்டார்கள். அவன், **விவேகமுள்ள மனுஷனாகிய செர்கியுபவுல்** என்னும் அதிபதியுடனே கூட இருந்ததாக வேதாகமம் கூறுகிறது(13:7). இங்குதான் அவர் அறிமுகம் ஆகிறான். ஆனால், நீர்க்குமிழி போன்று அடுத்த சில வசனங்களில் மறைந்துவிடுகிறான்.

இந்த **செர்கியு பவுல், மாயவித்தைக் காரனும், கள்ளத் தீர்க்கதரிசியுமான பர்யேசுவுக்கு,** தன்னுடன் இருக்கும்படியான அனுமதி கொடுத்து, அவனால் சொல்லப்படும் காரியங்களைக் கவனிக்கிறவனாக இருந்தாலும், அவைகள் தான் உண்மையென்று அப்படியே ஏற்றுக்கொள்ளாமல், பர்னபாவையும், பவுலையும் அழைப்பித்து, அவர்களிடத்திலும், தேவ வசனத்தைக் கேட்க ஆசையாயிருந்திருக்கிறான். அப்பொழுது, தன்னுடைய சாயம் வெளுத்துப் போகும் தருணம் வந்துவிட்டது என்பதை உணர்ந்து கொண்ட எலிமா என்னும் பேர்கொண்ட அந்த கள்ளத் தீர்க்கதரிசி, அதிபதியை விசுவாசத்தினின்று திருப்பும்படி, வகைத்தேடி, உண்மைத் தீர்க்கதசிகளாகிய பவுலோடும், பர்னபாவோடும் எதிர்த்து நின்றான். அப்பொழுது பவுல் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனாய் அவனை உற்றுப் பார்த்து, **வேதாகம வழக்கத்திற்கு மாறான முறையில்** கடுஞ் சொற்களைப் பயன்படுத்தி கடிந்து கொண்டான். ஆம், **"எல்லாக் கபடமும் எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவனே, பிசாசின் மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே, கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓயமாட்டாயோ** என்றான். அதன் விளைவாக அவன் குருடனானான். அப்பொழுது, அதிபதி செர்கியுபவுல் **சம்பவித்ததைக் கண்டு கர்த்தருடைய உபதேசத்தைக் குறித்து அதிசயப்பட்டு, விசுவாசித்தான்"** (அப். 13 : 7-12). இதுதான் செர்கியு பவுலைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கும் காரியங்கள்.

இப்பகுதி தவிர, இவன் பற்றி வேறெங்கும் நாம் வேதாகமத்தில் காணமுடியாது.

இவன் யார் என்பது பற்றி, மிகக் குறைவான வசனங்களே சாட்சியிட்டாலும், அவைகள், நமக்குப் பாடம் கற்றுக் கொடுக்கக் கூடிய அளவுக்கு சிறப்பாக இருக்கிறபடியால், அவைகளிலிருந்து நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று பார்த்து பயனடைவோம்.

**I செர்கியு பவுல் உண்மையை அறிந்து கொள்ளும் ஆசையுடையவனாய் இருந்திருக்கிறான்.**

செர்கியு பவுல் பற்றி, சொல்லப்பட்டிருப்பவைகளிலிருந்து நம்மால் கற்றுக் கொள்ளக் கூடிய முதல் பாடம், உண்மையை அறிந்து கொள்ளும் ஆசையுடையவனாய் அவன் இருந்துள்ளான் என்பது.

நம்முடைய தேவன், ஆவியானவர் மூலமாக இவனை **விவேகமுள்ள மனிதன்** என்று அறிமுகப்படுத்துகிறார் (வ. 7). பொதுவாகவே விவேகமுள்ள மனிதர்கள், தங்களுடைய ஞானத்தையும், அறிவையும் வெகுவாக நம்புகிறவர்களாக இருப்பர். தங்களுக்கு எல்லாம் தெரியும் என்றும், தங்களுக்குத் தெரிந்தே போதும் என்றும் நினைப்பர். தங்களுக்கு மற்றவர்கள் விஷயங்களை எடுத்துச் சொல்வதை அவ்வளவாக விரும்ப மாட்டார்கள். இதற்கு உதாரணமாக **அத்தேனே பட்டணத்து "மார்ஸ் மேடை" ஞானிகளைக் குறிப்பிடலாம்.** தனது இரண்டாவது சுவிசேஷப் பயணத்தில், அத்தேனே பட்டணத்தில், "ஜெப ஆலயத்தில் யூதரோடும், பக்தியுள்ளவர்களோடும், சந்தைவெளியில் எதிர்ப்பட்டவர்களோடும் தினந்தோறும் சம்பாஷணை செய்ததைக் கண்ட **எப்பிக்கூரரும், ஸ்தோயிக்கருமான ஞானிகளில் சிலர், பவுலோடு வாக்குவாதம் பண்ணியதோடு, இந்த வாயாடி என்ன பேசப் போகிறான் என்று தேவனுடைய ஊழியனாகிய பவுலை அற்பமாய் எண்ணினர்** (17 : 17, 18).

அப்படியே பவுலை, மார்ஸ் மேடைக்கு அழைத்துச் சென்று, நீ சொல்லுகிற புதிதான உபதேசம் இன்னதென்று நாங்கள் அறியலாமா? (வ. 19) என்று **ஏளனமாகச்** சொன்னார்கள். பிரசங்கத்தின் இறுதியில், சிலர் பவுலை **இகழ்ந்திருக்கிறார்கள்**. இன்னும் அந்த ஞானிகளில் சிலர் **இன்னொரு வேளை கேட்போம்** என்று சொல்லியிருக்கிறார்கள் (அப். 17 : 32) இதுதான் ஞானிகளின் பொதுவான செயல்பாடு, ஆனால், இந்த பொது விதிக்கு மாறாக, விவேகமுள்ள மனுஷனாகிய நமது செர்கியு பவுல், பொழுது போக்குக்காகவும், சரி போனால் போகட்டும் என்பதற்காகவும் வசனத்தைக் கேட்காமல், **ஆசையோடு** கேட்டிருக்கிறான் (13 :7).

அதுவும் எப்படிப்பட்ட சூழலில் அந்த ஆசை அவனுக்கு இருந்திருக்கிறது தெரியுமா? தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற மற்றும் அற்புதங்களைச் செய்கின்ற ஒருவன் தன்னருகில் இருக்கும் போது ஒருவேளை, அக்கயவனை கள்ளத் தீர்க்கதரிசி என்றும் மாயவித்தைக்காரன் என்றும் வேதாகமம் பிற்பாடு சொன்னாலும் ஆரம்பத்தில் செர்கியு பவுலுக்கு அவன் பற்றி முழுமையாகத்

தெரிந்திருக்க நியாயமில்லை. எலிமா என்னும் பர்யேசுவினுடைய கள்ளப் போதகங்களை நம்பும்படியாகவும், பொய்யான வித்தைகளை ஏற்றுக் கொள்ளும்படியாகவுமே சூழ்நிலை இருந்தது. அத்துடன், அவன் தன்னோடு, கிட்டத்தட்ட தன்னுடைய பராமரிப்பின் கீழ் இருந்தபடியால் அவனுக்காக வக்காலத்து வாங்க வேண்டிய நிர்பந்தமும் அவனுக்கு இருந்தது. ஆயினும் அந்நிலையிலும் இவன் பர்னபாவையையும், சவுலையும் அழைப்பித்து, அவர்களிடத்தில் தேவ வசனத்தைக் கேட்க ஆசையாயிருந்திருக்கிறான். இது எதைக் காட்டுகிறது? **எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ள வேண்டும்** (I தெச. 5 : 21) என்ற வசனம் எழுதிக் கொடுக்கப்படுவதற்கு முன்னமே, அந்த சிந்தையுடையவனாய் இருந்திருக்கிறான் என்பதைத் தானே காட்டுகிறது!

இதை வாசிக்கும் அருமையானவர்களே, கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்பவர்களின் நிலை இன்றைக்கு எப்படியிருக்கிறது? ஞானத்திற்கும், தங்களுக்கும் சற்றும் சம்பந்தமில்லாதவர்கள் கூட, ஆவிக்குரிய வாழ்வில், தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று தவறான எண்ணத்தில் வாழ்ந்து கொண்டுள்ளனர். இன்னும் சிலர் தங்களுக்குத் தெரிந்ததே உண்மையென்றும், அதுவே போதும் என்றும், அதற்கு மேல் எதுவும் தேவை இல்லை என்றும் எண்ணிக் கொண்டு இருக்கின்றனர். ஆனால், நம்முடைய செர்கியுபவுலோ, மிகுந்த ஞானமுடையனாயிருந்தும் நம்மைப் போல் எண்ணாமல், தேவனுடைய முழுமையான உபதேசத்தைக் கேட்க ஆசையுடையவனாய் இருந்துள் ளான். தேவ வசனத்தை அறியாமல் இருப்பது, தப்பான எண்ணத்திற்கு வழிவகுக்கும் என்ற உண்மை அவனுக்குப் புரிந்திருந்தது. (மத் 22:29). இன்றைக்கு எத்தனை பேர் இந்த செர்கியு பவுல் போல செயல்படத் தயாராக உள்ளோம். நாம் ஒவ்வொருவரும் செர்கியு பவுலாக மாறி உண்மைக்காக, சத்தியத்திற்காக ஆசைப்படுவோமானால், "சத்தியத்தை அறிந்து கொள்ள முடியும். சத்தியம் நம்மை விடுதலையாக்கும்". (யோவான் 8:32) அப்பொழுது, மெய்க்கிறிஸ்தவம், மாய்மாலக் காரர்களிடமிருந்து விடுபடும். கிறிஸ்துவின் நாமம் இப்பூமியில் மகிமைப்படும்.

## II செர்கியு பவுல் ஒப்பிட்டுப் பார்த்து உண்மையை அறிந்துள்ளான்.

அதிபதி செர்கியு பவுலிடமிருந்து நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற அடுத்த பாடம், அவன் காரியங்களை ஒப்பிட்டு பார்த்து உண்மையை அறிந்து கொள்ளும் குணமுடையவனாயிருந்துள்ளான் என்பது.

உண்மையை அறிந்து கொள்ளும் ஆசையுடையவனாய் மாத்திரம் அவன் இராமல், பர்னபா மற்றும் சவுலைக் கொண்டு கேட்ட காரியங்களையும், அவர்களின் செயல்பாட்டையும் தான் ஏற்கனவே கேட்டவைகளோடும், கண்டவைகளோடும், **ஒப்பிட்டுப் பார்த்திருக்கிறான்.** அந்த ஒப்பிடுதலின் மூலம் **உண்மை** எதுவென்பதையும் அறிந்து கொண்டான். அப். 13: 12-ல் "**அப்பொழுது, அதிபதி சம்பவித்ததைக் கண்டு, கர்த்தருடைய உபதேசத்தைக் குறித்து அதிசயப்பட்டான்**" என்று

சொல்லுகிறது. அவன் அதிசயிக்கும்படியான நிலை எப்படி வந்தது? **தான் ஏற்கனவே கேட்டவைகளோடும், கண்டவைகளோடும், இப்பொழுது புதிதாக கேட்கின்ற உபதேசங்களையும், பார்க்கின்ற அற்புதங்களையும் ஒப்பிட்டுப் பார்த்துள்ளான்.** அந்த ஒப்பிடுதல் அவனுக்கு உண்மையை எடுத்துக் சொல்லியிருக்கிறது. ஆகவே தான் கண்டு அதிசயப்பட்டிருக்கிறான். ஒருவேளை, ஒப்பிட்டுப் பார்க்காமல் இருந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? எது கள்ள உபதேசம், எது உண்மையான சத்தியம் என்பது அவனுக்குத் தெரிந்திருக்குமா? எது பொய்யான அற்புதம், எது சத்தியத்தின்படியான அற்புதம் என்பதை அவனால் அறிந்திருக்க முடியுமா? சொல்லுங்கள்.

அருமையானவர்களே, பொதுவாக எது சிறந்தது என்பதை தெரிந்துகொள்ள, நாம் ஒன்றோடு ஒன்றை ஒப்பிட்டுப் பார்க்கிறோம். அப்படி ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் நமக்குத் தானாக வருகிறது. அதற்கேற்ற அறிவும் நமக்கு இருக்கிறது. ஆனால், ஆன்மீக காரியங்கள் என்று வரும்போது, ஏனோ இந்த எண்ணமும், அறிவும் மாயமாய் மறைந்து விடுகிறது. இவ்விசயத்தில் பொதுவாக மனிதனுடைய செயல்பாடுகள் குறிப்பாக கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ள விரும்புகிறவர்களின் செயல்பாடுகள், விளங்கிக் கொள்வதற்கு சிரமமானதாகவும், ஏற்றுக் கொள்வதற்கு கடினமானதாகவும் இருக்கிறது. உண்மையைத் தெரிந்து கொள்ளும் ஆர்வமும் இல்லை. அப்படியே சிலவற்றை தெரிந்து கொண்டாலும், தங்களுடைய நம்பிக்கைகளோடும், செயல்பாட்டோடும் அவைகளை ஒப்பிட்டுப் பார்த்து தெரிந்து கொள்வதுமில்லை. ஆகவே தான், ஏராளமான கள்ள உபதேசங்களும், சற்றும் உண்மையில்லாத ஏமாற்றுகளும், வரம் என்ற பெயரிலும் அற்புதங்கள் என்ற பெயரிலும் ஒய்யாரமாக வலம் வந்து கொண்டிருக் கிறது. இன்றைய கிறிஸ்த சமுதாயத்திற்கு அதுபற்றி அணு அளவும் கவலையில்லை. ஆனால் இந்த செர்கியு பவுலோ உண்மையை அறிந்து கொள்ள ஆசைப்பட்டு, அதை ஒப்பிட்டுப் பார்த்து உண்மை எது என்பதைத் தெரிந்து கொண்டான்.

அவன் உண்மையை அறிந்து கொள்ளவிரும்பியபோது, தன்னோடிருக்கும் தீர்க்கதரிசி, அற்புதங்களைச் செய்யும் தீர்க்கதரிசி அதை எதிர்க்கிறான். ஆம், பர்னபாவோடும், சவுலோடும் எதிர்த்து நின்றான் (13 : 8). ஆனால், இவன் இந்த எதிர்ப்பு பற்றியோ, தன்னுடன் நெருங்கியிருக்கும் தீர்க்கதரிசி ஏதாகிலும் நினைத்துக் கொள்வாரோ என்பது பற்றியோ துளியும் கவலைப்படவில்லை. "தேவையானது ஒன்றே" (லூக். 10 : 42) என்று இயேசுவானவர் விளம்பினது போல **எனக்குத் தேவை உண்மை சத்தியம்** என்பதில் உறுதியாயிருந்து உண்மையை அறிந்து கொண்டான். I யோவான். 4:1-ல் உள்ளபடி, அந்த வசனம் எழுதப்படுவதற்கு முன்னமே, அந்த வசனத்தினடிப்படையில் செயல்பட்டு, எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்துப் பார்த்து, ஒப்பிட்டுப் பார்த்து உண்மையை அறிந்திருக்கிறான்.

ஆகவே, நாமும் கூட, செர்கியு பவுல் போல, உண்மையை அறிந்து கொள்வதில் ஆர்வமும், தீர்மானமும் உடையவர்களாயிருப்போம். எதிர்ப்பை பற்றிக் கவலைப்படாமல் உறுதியாக இருந்து, கேட்பவைகளை வேத வசனங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து உண்மையை அறிந்து கொள்வோம்.

## III செர்கியு பவுல் உண்மையை அறிந்து அதற்குத் தன்னை ஒப்புக் கொடுத்துள்ளான்.

விவேகமுள்ள மனிதனாகிய செர்கியு பவுலிடமிருந்து நமக்குக் கிடைக்கின்ற மற்றுமோர் பாடம், உண்மைக்காக ஆசைப்பட்டு, அதைத் தனக்குப் போதிக்கப்பட்டதோடு ஒப்பிட்டுப் பார்த்து, உண்மையை அறிந்து கொண்டதோடல்லாமல், அந்த உண்மைக்கு தன்னை ஒப்புக் கொடுத்துள்ளான் என்பது.

பதிமூன்றாம் அதிகாரம், 12ம் வசனம் இவ்விதம் சொல்லுகிறது. அப்பொழுது அதிபதி சம்பவித்ததைக் கண்டு, கர்த்தருடைய உபதேசத்தைக் குறித்து அதிசயப்பட்டு **விசுவாசித்தான் என்று.** இங்கே விசுவாசித்தான் என்பது ரோமர்.10 : 17-ல் சொல்லப்படும் விசுவாசம் கேள்வியினாலே வரும் என்ற, அந்த விசுவாசம் அல்ல. மாறாக, பர்னபாவைக் கொண்டும், சவுலைக் கொண்டும் தனக்கு போதிக்கப்பட்ட, **கர்த்தருடைய உபதேசத்திற்குக் கீழ்ப்படுத்தின இரட்சிக்கும் விசுவாசம்.** யாக்கோபிலே நாம் காண்கிற **கிரியையுள்ள விசுவாசம்,** (யாக்.2; 14) இன்னும் விளக்கமாகச் சொல்வதானால், அந்த விசுவாசம், தன்னுடைய கடந்தகால பாவங்களிலிருந்து **மனந்திரும்புதலுக்கும்,** (அப்.17:30) இயேசுவை தேவனுடைய குமாரனென்று **அறிக்கையிடு வதற்கும்** (ரோமர்.10;9,10) பாவமன்னிப்புக்கென்று **தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் பெறுவதற்கும்** வழிநடத்தின விசுவாசம் (அப்.2 :38, தீத்து.3:5) தான் இரட்சிப்பு அடையும்படியாய் இவையெல்லாவற்றையும் செய்திருக்கிறான் என்பதற்குப் பதிலாக **அவன் விசுவாசித்தான்** என்று இங்கே சொல்லியிருக்கிறது.

அது எப்படி என்று நீங்கள் ஒருவேளை கேட்கலாம்? அது அப்படித்தான் என்பதற்கு வேதாகமத்தில் பல உதாரணங்கள் உண்டு. அப்போஸ்தலர் 3-ம் அதிகாரத்தில், சாலொமோன் மண்டபத்தில் பேதுரு செய்த பிரசங்கத்தை கேட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்றவர்களைக் குறித்து, "**வசனத்தை கேட்டவர்களில் அநேகர் விசுவாசித்தார்கள்.** அவர்கள் தொகை ஐயாயிரமாயிருந்தது என்றே வேதம் கூறுகிறது" (வ.4) மேலும், அனனியா, சப்பீராள் சம்பவத்துக்கு பிறகு, "திரளான புருஷர்களும், ஸ்திரீகளும், **விசுவாசமுள்ளவர்களாகி கர்த்தரிடமாக அதிகதிமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்**" என்று தான் கூறப்பட்டுள்ளது (5 : 14) மேலும், அப்.6:8, 8:12, 8:17, 17:34 போன்ற இதே நூலின் பிற பகுதிகளும் "**விசுவாசித்தான்**" என்பதின் முழுப் பொருள் இதுதான் என்று சான்று பகர்கிறது. விசுவாசம் கிரியையில்லாததாய்

இருந்தால், தேவனுடைய அங்கீகாரத்தை ஒருபோதும் பெறாது. அது செத்த விசுவாசமாகவும், பிசாசின் விசுவாசமாகவுமே கருதப்படும். (யாக்.2: 17, 19).

அன்பானவர்களே, நம்முடைய செர்கியுபவுல் போல, கிறிஸ்துவை நேசிக்கும் ஒவ்வொருவரும் இருந்தால். கிறிஸ்தவம் இந்நேரத்திற்கு எங்கேயோ போயிருந்திருக்கும் மெய்க்கிறிஸ்தவம் தழைத்து ஓங்கியிருக்கும். உண்மைக் கிறிஸ்தவம் இதுதான் என்று உலகம் முழுமையும் அறிந்திருக்கும். நம்முடைய தேசமும், கிறிஸ்தவத்தின் பக்கம் தனது கவனத்தை திருப்பி, அதற்கு ஓரளவாவது கீழ்ப்படிந்திருக்கும். இங்கே, நான் எதையும் மிகைப்படுத்தவில்லை. உண்மையைத்தான் சொல்கிறான்.

இன்றைய கிறிஸ்தவ சமுதாயம் செர்கியு பவுல்போல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறதா? ஆம், என்று எத்தனை பேரால் சொல்லமுடியும்? நம்முடைய ஞானத்தைப் பெரிதாக நம்பாமல் உண்மையை அறிந்து கொள்ளவேண்டுமென்பதில், செர்கியு பவுல்போல ஆசையுடையவர் களாய் இருக்கிறோமா? நம்மோடிருப்பவர்கள் மதக் கட்டுப்பாடு, சபைக் கட்டுப்பாடு, குடும்பத்தின் கட்டுப்பாடு, பாரம்பரியக் கட்டுப்பாடு, உபதேசக் கட்டுப்பாடு என்றெல்லாம் சொல்லி நம்முடைய முயற்சியை எதிர்த்து நம்முடைய ஆர்வத்திற்கு அணை போடும்போது, செர்கியு பவுல் போல, இல்லை, நான் தெரிந்து கொண்டே ஆக வேண்டுமென்று உறுதி காட்டுகிறோமா? சத்தியம் இது தான் என்று தெள்ளத் தெளிவாகத் தெரிய வரும்போது, நாம் ஏற்கனவே அறிந்ததோடு, கடைப் பிடிப்பவைகளோடு ஒப்பிட்டுப் பார்த்து செர்கியுபவுல் போல உண்மையை அறிந்து கொள்கிறோமா? உண்மையை அறிந்தபின், விளைவைப் பற்றிக் கவலைப்படாமல், செர்கியு பவுல் போல் நம்மை அதற்கு ஒப்புக் கொடுக்கிறோமா? சொல்லுங்கள். ஏன் மௌனம் சாதிக்கிறீர்கள்?

இவனெல்லாம் ஒரு மனிதானா? என்று தானே செர்கியு பவுல் போன்றவர்களை நாம் இவ்வளவு காலம் ஒதுக்கி வந்திருக்கிறோம்! ஆனால் எவ்வளவு அருமையானவனாக, தேவனுக்கு உகந்தவனாக, தேவ மனிதர்களைக் கொண்டு வெளிப்பட்ட ஆவியானவரின் வார்த்தைகளுக்கு தன்னை ஒப்புக் கொடுத்தவனாக இருந்துள்ளான் பாருங்கள்! ஆகையால், நாம் ஒவ்வொருவரும் செர்கியு பவுலைக் கொண்டு, இந்த மாதத்திலே, ஏன் இந்த வருடத்திலே தேவன் கொடுத்திருக்கிற பாடங்களைக் கற்றுக் கொண்டு, கள்ளப் போதகங்களிலிருந்தும், போலியான அற்புதங்களிலிருந்தும் விடுபட்டு, விசுவாசத்திற்கு ஒப்புக்கொடுத்து, கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும் பெற்று (எபே 1:3) மறுமையின் நம்பிக்கையோடு வாழ்வோமாக! ஆமென்!!

**செ. இராஜநாயகம்.**

# எக்லீசியா வேதாகமக் கல்லூரி

மாணவர் சேர்க்கை அறிவிப்பு

## EKKLESIA BIBLE COLLEGE

*P.O. Box - 27, Kangayam - 638 701. India.*

**STUDENTS ADMISSION NOTIFICATION**

புதிய ஏற்பாட்டு உபதேசத்தில் முழு நம்பிக்கையும், நற்செய்தியை நானிலம் எங்கும் எடுத்துச் செல்வதில் இணையில்லா ஈடுபாடும் கொண்ட வாலிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் உடனடியாக வரவேற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| **காலம்** | : | **3 வருடம்** (செமஸ்டர் முறை) |
| **Duration** | : | **3 Years (Semester System)** |
| **கல்வித் தகுதி** | : | **+2 தேர்ச்சி** (அல்லது) **பட்டப்படிப்பு** |
| **Qualification** | : | **+2 Pass (or) Any Degree** |
| **பட்டம்** | : | **வேதயியலில் இளங்கலை பட்டம்** |
| **Degree** | : | **B.B.S. (Bachelor of Biblical Studies)** |

**தகுதியுள்ளவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும்.**

விபரங்கட்கும், விண்ணப்பங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

இயக்குநர்

**எக்லீசியா வேதாகமக் கல்லூரி,**

தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701. இந்தியா

✆ : (04257) 230030,

Cell : 98427 - 30382.

# தேவனிடத்தில் விசுவாசம்

எபிரேயர் ஆசிரியர் சொல்லும் போது, **"விசுவாசமானது, நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது"** (எபி.11:1). விசுவாசத்தை, நம்பிக்கை, நம்பப்படுவதின் உறுதி, தைரியம், ஏற்றுக் கொள்ளுதல் என்றும், கீழ்ப்படிதலை உண்டாக்கும் ஒன்று என்றும் சொல்லலாம். இந்த அடித்தளத்தின் மீதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை ஆரம்பமாகிறது. அதின் மீது தான் அது நிலை நிற்கிறது.

எபிரேய ஆசிரியர் சொல்லுகையில், **"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியம்: ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மை தேடுகிறவர்களுக்குப் பலனளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் என்கிறார்."** (எபி.11:6) தேவனை விசுவாசிப்பதற்கு இரண்டு காரியங்கள் தேவையென்பதை நீங்கள் இங்கே கவனிக்க வேண்டும். முதலாவது, அவர் உண்டென்று ஒருவன் விசுவாசிக்க வேண்டும். இரண்டாவதாக, அவரைத் தேடுகிறவர்களுக்கு அவர் பலனளிக்கிறவர் என்று நம்ப வேண்டும். அதற்கு குறையான எந்த விசுவாசமும் ஏற்புடையதாக இருக்குமா?

நம்மை சுற்றி இருக்கும் காரியங்களை நாம் பார்த்து விட்டு பரலோகத்தின் தேவன் ஒருவர் உண்டென்று நம்பாமலிருப்பது எப்படி? வானம், பூமி, மிருகம், மனிதகுலம். இவை அனைத்துமே சிருஷ்டிகள் உண்டென்பதைதானே காட்டுகிறது. தாவீது சொல்லுகையில், "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. (சங்19:1) "தேவன் இல்லையென்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்கிறான். அவர்கள் தங்களை கெடுத்து அருவருப்பான கிரியைகளை செய்துவருகிறார்கள். நன்மை செய்கிறவன் ஒருவனும் இல்லை" (சங்.14:1).

தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசித்தால் மாத்திரம் போதாதது, இயேசுக் கிறிஸ்து அவருடைய குமாரன் என்று விசுவாசிக்க வேண்டும். கிறிஸ்து தாமே சொன்னார் : **"உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்"** (யோவான். 14:1) இன்னும் அநேக வசனங்கள் நமக்கு இதை வெளிப்படுத்துகிறது. கவனியுங்கள். **"தேவன் தம்முடைய ஒரே பேறான**

**குமாரனை விசுவாசிக்கிறவனெவனோ அவன் கெட்டுப் போகாமல், நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்"** (யோவான்.3:16). **"அப்பொழுது, இயேசு சத்தமிட்டு, என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் என்னிடத்தில் அல்ல, என்னை அனுப்பினவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறான்"** (யோவான்.12:44) என்றார்.

கிறிஸ்துவை விசுவாசிக்காதவர்களைப் பற்றி நாம் என்ன சொல்லுவோம்? வேதாகமம் இப்படிப்பட்டவர்களைக் குறித்தும் எழுதியிருக்கிறது. கிறிஸ்து சொல்லுகையில் **"உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்"** (யோவா.3 :18). "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான். குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை.

**"தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றான்"** (யோவா.3:38). **"ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன். நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்"** (யோவான்.8 : 24).

நாம் கண்ட வசனத்தில், தேவனை விசுவாசித்தால் வரும் நன்மைகளை, ஆசிர்வாதங்களை பார்த்தோம். ஆனால், அதே சமயம், அப்படி நம்பாதவர்களுக்கு சாபங்களும், அய்யோக்களும், தண்டனைகளு மிருப்பதையும் நாம் கண்டிருக்கிறோம்.

ஆனால், தேவன் பேரிலும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் பேரிலும் நாம் எவ்வளவாக அன்பு வைக்க வேண்டும்? அவர்களை மனதளவில் ஏற்றுக் கொண்டால் போதுமா? தேவனுடைய வார்த்தைகள் நம்முடைய விசுவாசத்தை நாம் வெளிப்படுத்த வேண்டும் என்கிறது. உதாரணமாக கிறிஸ்து சொல்கையில், **"என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன?"** (லூக். 6 : 46). மீண்டும் அவர் வலியுறுத்துகையில், "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின் படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானனேயல்லாமல். என்னை நோக்கி, கர்த்தாவே. கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். **அப்பொழுது, நான்**

**ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்"** (மத். 7 : 21-23). இந்த ஜனங்கள் பக்தியுள்ளவர்கள் தான், அது மாத்திரமல்ல பக்திக்கான கிரியைகளும் செய்திருக்கிறார்கள். ஆனால் தவறு எங்கு நடந்தது? பரலோக பிதாவின் சித்தத்தின்படி அவர்கள் செயல்படவில்லை.

கர்த்தர் நம்மை என்ன செய்யச் சொல்கிறாரோ அதை செய்யுமளவிற்கு அவர்மீது நாம் விசுவாசம் வைக்கவேண்டும். ஆகையால் தான், **"விசுவாசம் மாத்திரம்"** நம்மை இரட்சிக்க முடியாது, அது செத்ததாக இருக்கிறது. யாக்கோபு எழுதுகையில், **"அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதான் செத்ததாயிருக்கும்"** (யாக்.2:17) அவர் தொடர்ந்து சொல்கையில், **"ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே"** (யாக்.2 : 24). இறுதியாக, **"அப்படியே ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது போல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது"** (யாக்.2 : 26) நாம் பார்த்த இந்த வசனங்களில் நம்மை இரட்சிப்பதற்கு **"விசுவாசம் மாத்திரம்"** போதாது என்று வலியுறுத்துகிறார்.

சில நேரங்களில் யோவான்.3:16ஐ சில போதகர்களும், பிரசங்கியாரும் "விசுவாசம் மாத்திரம்" போதும் என்று நிரூபிக்க பயன்படுத்துவார்கள். ஆனால் கிறிஸ்துவே அங்கு விசுவாசம் மாத்திரம் போதும் என்று சொல்லவில்லை. மாறாக, விசுவாசித்தால் நாம் இழந்து போகாமல் நித்திய ஜீவனை அடைவோம் என்றுதான் சொல்கிறார். கேள்வி யாதெனில், ஒருவன் தேவனையும், அவருடைய வார்த்தையையும் விசுவாசித்தால் என்ன செய்வான்? அவன் கர்த்தருக்கு கீழ்ப்படிவான், அதுதான் அவர் சொல்லுகிற கருத்து.

ஆம், **நாம் விசுவாசித்தால் நீதிமானாக்கப்படுகிறோம்** (ரோமர்.5:1). **ஆனால், விசுவாசத்தினால் மாத்திரமல்ல. கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டோம்** (அப். 2 : 8,9). ஆனால் விசுவாசத்தினால் மாத்திரமல்ல.

இறுதியாக எபே.4:5-ல் **ஒரே விசுவாசம் உண்டென்று வேதம் சொல்கிறது.** நமக்கு ஒரே வேதாகமம் உண்டு. நாம் அதை ஏற்றுக் கொண்டு விசுவாசித்து அதற்கு கீழ்ப்படிய வேண்டும். அப்படி கீழ்ப்படிகிறவர்களை கர்த்தர் தமது சபையில் சேர்த்து கொள்கிறார். ஆமென்.

**ஜே.சி. சோட்.** **J.C. CHOATE**

*ஜெபியுங்கள்!* *திட்டமிடுங்கள்!* *பங்குபெறுங்கள்!*

# காங்கேயம் கிறிஸ்துவின் சபையாரும்
# எக்லீசியா வேதாகமக் கல்லூரியும்

**இணைந்து நடத்தும்**

# ஆறாம் வேதாகம கருத்தரங்கம்
## (Sixth Annual Bible Lectureship)

நாள் : **அக்டோபர் 2,3 - 2003 (வியாழன், வெள்ளி)**

நேரம் : **காலை 9.00 - 12.30 மணிவரை**
**மாலை 2.00 -5.00 மணி வரை**

இடம் : **கிறிஸ்துவின் சபை வளாகம்**
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

**பேச்சாளர்கள் : தெரிந்தெடுக்கப்பட்ட தேவதாசர்கள்**

வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.

**பதிவுக் கட்டணம் இல்லை**

தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக இடவசதி போதுமானது உண்டு.

*தொடர்பு முகவரி :*

**கிறிஸ்துவின் சபை**
தாராபுரம் ரோடு, காங்கேயம் - 638 701.
போன் : 04257 - 230030, 98427 - 30382

# ஒரு பெண் போதிக்கலாமா?

ஒரு கிறிஸ்தவப் பெண், இருபாலரும் கலந்திருக்கும் கூட்டத்தில் போதிக்கலாமா? என்பது கேள்வியாயிருந்தால், பதில் "இல்லை" என்பது தான். I கொரிந்தியர் 14 : 34, 35ல் I தீமோத்தேயு 2 : 12-14ல் உள்ள வசனப் பகுதிகள், ஒரு பெண், சபையாக கூடிவந்திருக்கும் போது ஆண்கள் மீது அதிகாரம் செலுத்துவதை தடைசெய்கிறது. "உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்க வேண்டும்.

ஆனால், உபதேசம் என்பது வெளிப்படையான விரிவுரை என்பதிலும் அதிகமான பொருளைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறது. அன்றாட வாழ்க்கையை நடத்தும் போது நாம் ஒவ்வொருவரும் "போதிக்கிறோம்",

நம்முடைய நடத்தையினால் நாம் போதிக்கிறோம், நாம் மற்றவர்களோடு பழகும் விதத்தினால் போதிக்கிறோம். இளம் ஊழியர்களாகிய தீத்துவுக்கு பவுல் எழுதும் போது, பெண்கள் தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களுமாய் "தேவ வசனம் தூஷிக்கப் படாதபடிக்கு" அவர்களுடைய நடத்தை இருக்க வேண்டும் என்கிறார். தீமோத்தேயுவிற்கு அவர் இளம் விதவைகளை குறித்து எழுதுகையில், அவர்களுடைய நடத்தை "நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்கமலிருக்கவும் வேண்டுமென்றிருக்கிறேன்" என்கிறார். இந்த புத்திமதியை அவர் எழுதியிருப்பதிலிருந்து நாம் எல்லாருமே போதிக்கிறோம் என்பது தெளிவாகிறது. நல்ல பாடங்களையும் அல்லது தேவ வசனத்தின் மேலும், ஜனங்கள் மேலும் அவமானத்தையும், நிந்தையையும் கொண்டு வருகிற மோசமான பாடங்களையும் மற்றவர்களுக்கு நாம் வாழ்கிற வாழ்க்கையால் கற்றுத் தருகிறோம்.

தங்கள் இல்லத்தின் நான்கு சுவர்களுக்குள் பெண்கள் இடைவிடாது போதிக்கிறார்கள். சில கிறிஸ்தவப் பெண்கள் அவிசுவாசமுள்ள புருஷர்களை திருமணம் செய்ததை மனதில் வைத்து, பேதுரு புத்திமதிகளை எழுதுகிறார்.

## விவாதக் கருத்து

இந்த உலகத்தில் நாம் தனியே வாழ்கிறதில்லை. நாம் செய்கிற ஒவ்வொன்றும் மற்றவர்களால் காணப்படுகிறது! அவர்கள் மேல் ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்துகிறது! நம்மை நாமே "கிறிஸ்துவின் மாதிரி" என்று அழைத்துக் கொண்டு, அவரைப் போல வாழாவிடில் அது அநேகரை கிறிஸ்தவத்திலிருந்து வழி விலகச் செய்கிறது. ரோமர் 2 : 24ல் தீர்க்கதரிசனம் மேற்கோளிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது போல **"எழுதியிருக்கிறபடி, தேவனுடைய நாமம் புற ஜாதிகளுக்குள்ளே உங்கள் மூலமாய்த் தூஷிக்கப்படுகிறதே"** என்பது நம் மூலமாக நிறைவேறும்.

**அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள்.** (I பேதுரு 3 : 1-2).

மனைவி கிறிஸ்தவளாகவும், கணவன் அப்படியில்லாத போதும், இரட்சிக்கப்படும்படி அவனுக்கு இருக்கிற ஒரு நம்பிக்கை அவனுடைய மனைவியின் உண்மையான நடத்தை தான். அவள் தன்னுடைய கிறிஸ்தவத்தைக் குறித்து அரை மனதாகவும், அவ்வப்பொழுது சபைக்கு போகவும், அநுதின ஆவிக்குரிய வளர்ச்சியை குறித்தோ அல்லது மற்றவர்களுக்குப் போதிப்பதைக் குறித்தோ கவலைப்படாமலிருந்தால் அப்படிப்பட்டவள் தனது கணவனுக்கு இடறுதலுக்கான கல்லாக மாறும் வாய்ப்பு இல்லாமலில்லை. அவளுடைய சொந்த நடத்தையே அவனை சுவிஷேசத்தின் உண்மையை காணாதபடி குருடாக்கி விடுகிறது.

ஆனால் அவள் அன்பாகவும், மரியாதையாகவும், தேவன் தன்னுடைய வாழ்க்கையில் முதலிடம் வகிக்க வேண்டும் என்று தன் நடத்தையில் மூலம் வெளிப்படுத்தினால், கணவனும், குடும்பத்தினரும் அவளுடைய நன் நடத்தையிலிருந்து கற்றுக் கொள்வார்கள்.

பிள்ளைகள், வீட்டிலே கற்றுக் கொள்ளும் விசுவாசப் பாடங்களின் பெரும்பாலானவைகளுக்கு, பெண்களே போதகர்களாகயிருப்பார்கள். இளம் பிரசங்கியாகிய தீமோத்தேயுவைக் குறித்து நாம் வாசிக்கிறோம். **"உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய**

**லோவிசாளுக்குள்ளும், உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்து, அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயத்திருக்கிறேன்** (II தீமோத்தேயு 1 : 5) தீமோத்தேயுவின் தந்தை புறஜாதியாக இருந்தார். கிறிஸ்துவின் மேல் விசுவாசத்தை கட்டுவதற்கு அடிப்படையாக பழைய ஏற்பாட்டினால் உண்டாகிற விசுவாசம் அவருக்குள் இல்லை. தீமோத்தேயு இந்த சத்தியத்தை சிறுபிள்ளையாயிருக்கும் போதே, அவனுடைய பாட்டியும், தாயும் அவனை மடியிலே வைத்து கவனமாய் சொல்லிக் கொடுப்பதை கேட்டு தெரிந்து கொண்டான்.

பெண்கள் தேவ வசனங்களை போதிக்கும் இந்த உதாரணங்கள், அவர்கள் தங்கள் நடத்தையிலும், இல்லத்திலும் ஒவ்வொரு தருணம் வாய்க்கும் போதும் போதிப்பதற்கு சுதந்திரமுள்ளவர்களாகவே இருக்கிறதாக காட்டுகிறது. ஆனால் ஒரு பெண் தன் குடும்பத்தினர் அல்லாதவர்களுக்கு போதிக்கலாமா?

ஆக்கில்லா, என்கிற மனிதனைக் குறித்தும், அவனுடைய மனைவியாகிய பிரிஸ்கில்லாளைக் குறித்தும் அப்போஸ்தலர் 18 : 2, 25, 26-ல் வாசிக்கிறோம்.

அவர்கள் கொரிந்து பட்டணத்தில் வாழ்ந்தார்கள். அவர்களின் தொழில் கூடாரம் பண்ணுதல். கொரிந்து பட்டணத்திலிருக்கையில் பவுல் இவர்களோடு தங்கினார். ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் ஏற்கனவே கிறிஸ்தவர்களாக மாறியிருந்தார்களா அல்லது பவுலால் மனமாற்றமடைந்தார்களா என்பதைப் பற்றி வேதாகமம் நமக்கு ஒன்றும் கூறவில்லை. ஆனால் பவுல் கொரிந்தை விட்டு புறப்பட்டுப் போகையில், இந்த தம்பதிகள் எபேசு மட்டும் ஆவலோடு சென்றார்கள். அங்கே, யூதனாயிருந்த அப்பொல்லோவைக் கண்டார்கள், அவன் **"சாதுரியவானும், வேதாகமங்களில் வல்லவனுமாயிருந்தான் (வசனம் 24)", அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக் கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்** (வச. 26)

இந்த வசனத்தின் மொழி நடையை நாம் கவனித்துப் பார்த்தால், ஆக்கில்லாவும், அவன் மனைவியும் சேர்ந்து, ஒரு கூட்டு முயற்சியாகத் தான் அப்பொல்லாவுக்கு போதித்தார்கள் என்பது தெளிவாகிறது. அந்த சம்பவம், ஒரு ஜெப ஆலயத்தில் எல்லாருக்கும் போதிக்கிறோமே அப்படியோ அல்லது சபையாக கூடி வந்திருக்கும் போது

உபதேசிக்கிறோமே அப்படியோ அமைந்திருக்கவில்லை. மாறாக, அவனை "தங்களோடு சேர்த்துக் கொண்டு" அவர்கள் அவனுக்கு ஒரு வீட்டுச் சுழலிலே போதித்திருக்க அதிக வாய்ப்புண்டு. வீட்டிலே, வேதாகமத்தை பற்றி நாம் படிக்கும் அநேக, சமயங்களில் பெண்களும் பங்கெடுத்துக் கொள்வது நல்லதுதான். அந்த சமயங்களில், அவளுடைய மனோநிலையும், நடத்தையும், மற்ற கிறிஸ்தவர்களுக்கு என்ன சொல்லப்படுகிறதோ அதைப் போலவே : சாந்தமாகவும், அன்பாகவும் இருக்க வேண்டுமே தவிர "எனக்கெல்லாம் தெரியும்" என்பதைப் போல அமையக் கூடாது.

அச்சுத் தொழில் அதிகமான தற்போதைய காலத்தில், அநேக விதமான புத்தகங்கள் புழக்கத்திலிருப்பதால், சில வேளைகளில், ஒரு கேள்வி கேட்கப்படுகிறது, அது என்னவென்றால், "ஒரு பெண் எழுதிய ஒரு கட்டுரையையோ அல்லது புத்தகத்தையோ ஒரு ஆண் படித்தால் அது தவறா? என்பது தான். இதுவும், நாம் ஏற்கனவே படித்தது போல் குடும்பத்தில் வேதத்தைப் பற்றி படிக்கையில் பெண்கள் ஈடுபடுவதைப் போன்றே இருக்கிறது, ஒரே ஒரு மாற்றம் யாதெனில், புத்தகத்தில் வார்த்தைகள் அச்சிலிருக்கிறது, குடும்ப சூழலில் வார்தைகள் பேசப்படுகிறது. பொது இடத்தில் போதிப்பதைப் போல இந்த காரியத்தில் நடப்பதில்லை, புத்தகத்தைப் படிப்பவர் அதை படிக்கலாம் அல்லது அதை மூடி கீழே வைத்துவிடலாம் அவர் எதை தெரிவு செய்யவும் அவருக்கு உரிமை உண்டு. அவர் படிக்கும் போது, அருகில் இல்லாத அந்த ஸ்திரீயானவள் எந்த ஒரு தலைமைக்கான அதிகாரத்தையும் (அந்த ஆண் மேல்) செலுத்துவதில்லை.

பெண்கள் பொதுவான இடங்களில் பேசக் கூடிய சமயங்கள் ஏதாவது உண்டா? பவுல், தீத்துவுக்கு முதிர்வயதுள்ள ஸ்திரீகளைப் பற்றி எழுதும் போது, **"பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும்...."** (தீத்து 2 : 3-5) என்று எழுதுகிறார். ஆகவே தேவன் பவுலைக் கொண்டு பெண்கள் மற்ற பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் போதிக்கலாம் என்று அனுமதி மாத்திரம் தரவில்லை, கட்டளையும் கொடுத்திருக்கிறார். இது வீட்டிலோ, பொதுவான இடத்திலோ, சிறு வகுப்பிலோ, பெரிய

வகுப்புகளிலோ கருத்தரங்குகளிலோ. ஆண்கள் இல்லாத எந்த இடத்திலும் அப்படிச் செய்யலாம்.

சிறிய ஒரு கிராமத்திலோ அல்லது வேறு இடத்திலோ பெண்கள் மாத்திரம் இருக்கக் கூடிய சபைகள் இருக்கவும் வாய்ப்புகள் உண்டு. அப்படிப்பட்ட வேளையில் நாம் என்ன செய்ய வேண்டும்? தங்களை வழிநடத்துவதற்கு ஆண்கள் இல்லை என்பதால், சபையாக கூடிவருவதையே விட்டுவிட வேண்டுமா? இல்லை; அந்த சபையின் அங்கத்தினர் அனைவருமே பெண்களாக இருந்தால் அவர்களே ஆராதனையை நடத்தலாம், எந்த ஒரு ஆணும் அக்கூட்டத்தில் இல்லாத வரை.

ஆகவே, பெண்கள் போதிக்கலாமா என்பது கேள்வியல்ல? ஆனால் அவர்கள் வழிநடத்துகிறவர்களாக, தலைமை பொறுப்பை ஏற்கலாமா? என்பதுதான் கேள்வி. ஆண்கள் இருக்கும் கூட்டத்தில் பெண்கள் பிரசங்கிக்க கூடாது. கிறிஸ்தவர்களாக கூடிவரும்போது, அதுவும் ஆண்களும் இருக்கும் போது, ஆராதனையின் பங்கை ஒரு ஆண்தான் நடத்த வேண்டும். இது ஆண்களுக்கென்று தேவன் தந்த கடமையாக இருக்கிறது, அதை அவர்கள் பெண்களிடம் கொடுக்கும் போது அந்த பெண்கள் எவ்வளவு திறமையுள்ளவர்களாக இருந்தாலும் கூட, இப்படி பொறுப்புகளை பெண்களிடம் கொடுக்கும் ஆண்கள் தேவனுக்கு கீழ்படியாமல் போகிறார்கள் என்பதுதான் உண்மை.

சிறு பிள்ளைகளுக்கும், மற்ற பெண்களுக்கும், அவிசுவாசிகளுக்கும் போதிப்பதே மகத்தானதொரு செயலாகும். அதற்கே அதிக நேரம் செலவாகும். அதை பெண்கள் அதிக கவனத்தோடு செய்தாலே, அநேகர் தங்கள் நித்தியத்தை தேவனோடு கழிக்க முடியும். ஆகவே பெண்களால் என்ன செய்ய கூடாதோ அதை பற்றி சர்ச்சையில் ஈடுபடுகிறதும், தர்க்கம் பண்ணுகிறதுமாயிராமல் அவர்களால், என்ன செய்ய முடியுமோ அதில் நாம் கவனம் செலுத்துவது நல்லது.

**B.B. CHOATE** **R.R. NAYAGAM**

## ஜெபியுங்கள்

எதிர்வரும் அக்டோபர் திங்கள் 2,3-2003 ஆகிய தேதிகளில் நடைபெறும் **ஆறாவது வேதாகம கருத்தரங்கிற்க்காக** ஊக்கமாக ஜெபிக்கும்படி வேண்டுகிறோம்.

# திரும்பி பார்ப்போம் வாருங்கள்

சபைக்கும், சத்தியத்திற்கும், தூணும் ஆதாரமுமாய் இருக்கிற, இருக்கப் போகிற வாலிப உள்ளங்களுக்கு உயிர்ந்தெழுந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தினாலே வாழ்த்துக்கள். இந்த கட்டுரையின் மூலமாக உங்கள் ஒவ்வொருவரின் இருதயத்தில் தேவ வசனத்தை விதைக்கும் வாய்ப்பு கிடைத்ததற்காக நான் மிகவும் சந்தோஷம் அடைகிறேன். **“இளவயதும் வாலிபமும் மாயையே”** (பிர 11 : 10) என்று பிரசங்கி சொல்லுகிறபடியால் இந்த வாலிப பிரயாத்தை நாம் பிரயோஜனமாக பயன்படுத்த வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுலும் எபேசு பட்டணத்தாருக்கு எழுதுகிற போது **“நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்”** (எபே 5 : 16) என்று எழுதுகிறார். நாட்கள் மற்றவர்களுக்கு பொல்லாதவைகளாயிருக்கிறதோ இல்லையோ, வாலிபர்களாகிய நமக்கு மிகவும் பொல்லாததாயிருக்கிறது. எனவே நாட்களை நாம் எச்சரிக்கையாய், ஜாக்கிரதையாய், பிரயோஜனப்படுத்த முயற்சி செய்ய வேண்டும். இந்த வாலிப பிரயாத்திலே நின்று கொண்டு நாம் கடந்து வந்த பாதையை சற்று சீர்தூக்கி, திரும்பிப் பார்ப்போம்.

**கிறிஸ்துவை அறியாத போது இருந்த வாழ்க்கை**

நம்முடைய வாழ்க்கையில் நமக்கு ஏற்படுகிற பல பிரச்சினைகளை நாம் சற்று முன்னால் போய் பார்ப்போம் என்றால் எல்லா பிரச்சினைகளுக்கும் காரணகர்த்தா நாமாகத்தான் இருப்போம் என்று தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும். சில நாளைக்கு முன்பாக ஒரு வாலிப நண்பரை சந்தித்தேன். அவர் புற்று நோயால் அவதிப்பட்டு வந்தார் அவரைப் பார்த்து பேசி கொண்டு இருந்த போது இறைவன் தான் எனக்கு இந்த தண்டனையை கொடுத்தார் என்று வேதனையோடு வெளிப்படுத்தினார். ஆனால் அவர் எல்லாவித தீமையான பழக்க வழக்கங்களுக்கு அடிமையாயிருந்தபடியால் அவருக்கு அந்த வியாதி வந்திருந்தது. ஆனால் அவர் அதை யோசிக்காமல் தேவனை குறை கூறிக் கொண்டு இருந்தார். எல்லா பாவங்களையும் நாமே செய்து விட்டு பிரச்சினைகள் முற்றிப் போகும் போது நாம் அந்த பழியை தேவன் மீது போட்டு விடுகிறோம். “அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகிறான் (யாக்.1:14) என்று பரிசுத்த ஆவியானவர் யாக்கோபுவை கொண்டு விளம்பி இருக்கிறார்.

இந்த வாலிப பருவத்தில் தேவனை மறந்து எதையாவது புதிதாக கற்றுக் கொள்ள வேண்டும். அதைச் செய்ய வேண்டும். இதைச் செய்ய வேண்டும் என்று விரும்புகின்ற போது சாத்தான் தீமையான பழக்க வழக்கங்களுக்கு அவர்களை இழுத்து போட்டு விடுகிறான். அதனால் தான் பிரசங்கி சொல்கின்ற போது **“உன் வாலிப பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை...** (பிர. 12 :1) என்று புத்தி சொல்லுகின்றார். நாம் கிறிஸ்துவை அறியாத போது சந்தோஷத்தை இழந்து பாவ கட்டுகளினால் கட்டப்பட்டு இருந்தோம். நம்முடைய வாழ்க்கை தேவனோடு இல்லாமல், தனித்து பிரிந்து போய் இருந்தோம். வசனம் ஒரு படி மேலே போய் “நாம் அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்தோம் (எபே. 2:1) என்று கூறுகிறது. இருளின் அதிகாரத்தில் (கொலோ.1:13) இருந்த நம்மை கிறிஸ்து தம்முடைய ஒளியினிடத்திற்கு நம்மை கொண்டு வந்து சேர்த்து இருக்கிறார். (I பேது 2:9) ஆதி தகப்பனாகிய ஆதாமின் கீழ்படியாமையினாலே உலகத்திலே பாவம் வேரூன்றி நன்மை தீமையறிதக்க பெரிய விருட்சமாக வளர்ந்து அந்த பாவ விருசத்தின் நிழலில் குடியிருந்த நாம் அநாதி தேவனாகிய இயேசு கிறிஸ்துவின் கீழ்படிதலினாலே மீட்கப்பட்டு இப்பொழுது ஜீவ விருட்சம் என்னும் இரட்சிப்பின் நிழலில் குடியிருக்கிறோம்.

ஆகையால் வாலிப உள்ளங்களே உங்கள் சரீரம் தேவனுக்குரியது. அதை பரிசுத்தத்தோடே பாதுகாத்துக் கொள்ள வேண்டும். உங்களை கிறிஸ்து பாவத்திலிருந்து மீட்டு எடுத்து இருக்கிறார். ஆகையால் உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும் போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்பட வேண்டும் (I தெச.5:23) என்று தேவன் விரும்புகிறார்.

**கிறிஸ்துவை அறிந்த பின் இருக்கின்ற வாழ்க்கை**

- நம்முடைய தேவன் நம்மேல் வைத்த அன்பினாலே கிறிஸ்துவை இரட்சகராக இந்த உலகத்திற்கு அனுப்பினார் (யோவா.3;16). கிறிஸ்து நம்மேல் வைத்த அன்பினாலே தம்மை தாமே ஜீவபலியாக ஒப்புக் கொடுத்து, இரத்தத்தை சிந்தி, “நமக்கு மீட்பை உண்டு பண்ணி இருக்கிறார். (I யோ3:16) வாலிபர்களாகிய நாம் அதை நன்றாக உணர்ந்து அறிந்து இருக்கிறோம். நாம் மீட்பை பெறுவதற்கு கிறிஸ்து இரத்தம் சிந்தினார், சிலுவையை சுமந்தார், சிலுவையில் அறையப்பட்டார் என்று பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கிறோம். அவர் மிகப் பெரிய தியாகத்தை செய்து இருக்கிறார். “எனக்காக என் மீட்பர் இரத்தம் சிந்தி இருக்கிறார். அவருக்காக நான் என்ன செய்ய போகிறேன்” என்று ஒவ்வொரு வாலிப

உள்ளங்களுக்கும் இந்த கேள்வி எழ வேண்டும். சங்கீதக்காரனாகிய தாவீதை தேவன் அநேக உபத்திரவங்களுக்கும் இக்கட்டுகளுக்கும் விலக்கி காத்தார்.


அவன் தன்னுடைய சங்கீத புஸ்தகத்தில் இப்படியாக ஒரு கேள்வியை எழுப்புகிறான். "கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன் என்று கேட்கிறான் (சங் 117:12) ஒரு வேளை நாம் பெரிய செல்வந்தராக இருந்தால் தேவனுக்கு பணத்தையோ அல்லது பொருளையோ செலுத்த முடியுமா? நிச்சயமாக முடியாது ஏனெனில் "பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது" என்று வேதாகமம் விளம்புகிறது. பின்பு நான் கர்த்தருக்கு என்னத்தை செலுத்துவேன். சங்கீதக்காரனே அதற்கான பதிலையும் அடுத்த வசனத்தில் எழுதுகிறார் "இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுவேன் (சங் 116 : 13) என்று கூறுகிறார். கிறிஸ்து நமக்காக செய்த தியாகத்திற்கு நாம் இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு அநேக ஆத்துமாக்களை ஆதாயம் செய்வோம். நான் மாத்திரம் பரலோகம் போனால் போதும் என்று எண்ணாமல், என்னுடைய தாய், தகப்பன், சகோதரன், சகோதரி, நண்பர்கள், உறவினர்கள் எல்லாரும் பரலோகம் போக வேண்டும் என்று வாலிபர்களாகிய நீங்கள் சிந்தித்து செயல்படுங்கள். கிறிஸ்துவின் பிரதான கட்டளையை "அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்தேயு 28 : 18-20) என்ற வசனத்தை ஏற்று அநேகரை கிறிஸ்துவுக்கு சீஷராக்குவோம், அநேகரை கிறிஸ்துவுக்குள் அழைத்து வருவோம்.

அதோடு மாத்திரம் அல்ல கிறிஸ்துவின் சபைக்கும், சத்தியத்திற்கும் தூணும் ஆதாரமுமாய் விளங்குவோம், தேவனுடைய கிருபை உங்களோடு சதாகலங்களிலும் இருந்து வழி நடத்துவதாக ஆமென்.

**N. பர்னபாஸ்**
திருப்பூர்.

# "காதுகளால் பார்க்கும் விலங்கினம்"

எனக்கன்பான சிறுபிள்ளைகளே, உங்கள் யாவரையும் மீண்டும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன். இம்மாதத்தில் ஒரு வித்தியாசமான மிருகம் பற்றி நாம் படிப்போம்.



மிருக ராஜ்ஜியத்தில், எறும்பு முதல் யானை வரை, நாம் விதவிதமான மிருகங்களைப் பார்க்கிறோம். தேவனுடைய படைப்பாக அவைகளில் ஆச்சரியப்படத்தக்க ஒன்று "காதுகளால்" பார்க்கும் மிருகம்.

அநேக மிருகங்களுக்கு நல்ல கண் பார்வை உண்டு. தங்கள் பார்வையை, உணவு வேட்டைக்கு அவை பயன்படுத்துகின்றன. உதாரணமாக, ஆந்தைகளுக்கு பெரிய கண்கள் உண்டு. அவைகளை வைத்து அவை இரவிலும் 'ஆகாரம்' தேடுகிறது. அதுபோல, பூனைகள் மனிதர்கள் பார்க்க முடியாத இரவு நேரங்களில், தங்கள் கண்களை விரிவாக்கி, இரை தேடுகிறது. இது போல, உயரப் பறக்கும் கழுகுகள், பூமியிலே திரியும் சுண்டெலியை துல்லியமாக கண்டு கொள்ளும் பார்வையை உடையதாய் இருக்கிறது.

ஆனால், சில பறவைகளுக்குச் சிறய கண்களும், சுமாரான பார்வை

கொண்டதாய் இருக்கிறது. அவைகள் எப்படி தங்கள் உணவைத் தேடும்? தேவன், அப்படிப்பட்டவைகளுக்கு "காதுகளால் பார்த்து" உணவைத் தேடும் வேறு வழியைக் கொடுத்திருக்கிறார். மிருக இனத்தின் ஒன்றாகக் கருதப்படும் வெளவால் இவ்வகையைச் சார்ந்தது. வெளவாலுக்கு மிகச் சிறிய கண்களே உண்டு. சில வெளவால்களை நீங்கள் கவனித்துப் பார்த்தால், சுலபமாக நகரக் கூடிய பெரிய காதுகளை உடையதாய் இருக்கும். விஞ்ஞானிகள், இந்த வெளவால் "**காதுகளால் பார்க்கிறது**" என்று கூறுகிறார்கள்.

அது எப்படி என்று பார்ப்போம். மனிதர்களால் கேட்க முடியாத ஒரு சத்தத்தை வெளவால்கள் ஏற்படுத்துகிறது. எதிரே இருக்கும் பொருள்களின் மீது படும்படியான ஒலி அலைகளை அது அனுப்புகிறது. நொடிப் பொழுதில், அவைகளின் காதுகளுக்கு, **அப்பொருள்களிலிருந்து, எதிரொலி** வருகிறது. அந்த எதிரொலியைக் கொண்டு, **அந்தப் பொருள் எந்த திசையில், எவ்வளவு தூரத்தில் இருக்கிறதென்பதையும் தெரிந்து கொள்கிறது.** அதன் மூலம், தனக்குத் தேவையான ஆகாரத்தை அவை பெற்றுக் கொள்கிறது. இதைத் தான் ஆங்கிலத்தில் Echo-location முறை என்று சொல்லுகிறார்கள்.

எதிரொலி மூலம் கண்டறியும் தன்மையைக் கொண்டு, இந்த வெளவால் கடுமையான பகுதிகளான குகை மற்றும் அடர்ந்த காடுகளிலும், சிரமமில்லாமல் பறக்க முடியும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஒலி அலையின் மூலமாகத் தான், பூச்சிகள் இருக்கும் இடத்தை அறிந்து, அவை பறந்து கொண்டிருந்தாலும் வெளவால் பிடித்து தின்கிறது.

சோதனைக்காக, சிறுகற்களை, வெளவால்களுக்கு முன்பு வீசிப் பார்த்தபோது, அதாவது பூச்சிகள் என்று நினைத்துப் பிடிக்கிறதா என்று பார்த்த போது, அவைகளைப் பிடிக்கவில்லை. ஒன்று, சாப்பிடுவதற்கு ஏற்றதா, இல்லையா என்பதை "**ஒலி அலையை**" வைத்தும், "**எதிரொலி**"யை வைத்தும் தெரிந்து கொள்கிறது.

மிருகங்கள் சிரமமில்லாமல் வாழும்படியாகவே தேவன் அவைகளை வடிவமைத்திருக்கிறார். தேவனால் படைக்கப்பட்ட மிருகங்களிடமிருந்து, பலவற்றை மனிதன் கற்றிருக்கிறான். கற்றுக் கொள்வதற்கு இன்னும் ஏராளம் உண்டு. "தேவனுடைய கரங்களின் கிரியை எவ்வளவு பெரிதாயிருக்கிறது" தேவனுக்கு மகிமை உண்டாகட்டும்.

**Bert Thomson** **Abel R. Nayagam**

# தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள்

"தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள் என்ற சொற்றொடரை வைத்து கடந்த மாதம் கற்றுக் கொள்ளத் தொடங்கினோம். இவ்வார்த்தைகள் எபே 4:39ல் இடம் பெற்றிருக்கிறது.

முதலாவதாக, இது இரகசியமான ஒன்று பற்றியோ அல்லது அற்புதமான ஒன்று பற்றியோ குறிப்பதில்லையென்று பார்த்தோம். மாறாக புரிந்து கொள்வதற்கு, இது மிகவும் சுலபமான ஒன்று.

தேவன், எனக்கும், உங்களுக்கும், பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதீர்கள் என்று கட்டளை கொடுக்கும் போது, மனந்திரும்பாமல், தொடர்ந்து பாவ வாழ்க்கையில் நிலைத்திருக்க வேண்டாமென்றே கூறுகிறார். தேவனுக்கு கீழ்ப்படியாததொரு வாழ்க்கை வாழக்கூடாது. பாவத்திலே வாழ்வது. தேவனுக்கு எதிராக கலகம் செய்து அவரை துக்கப்படுத்துகிறது. அப்படிப்பட்ட பாவங்களிலிருந்து நாம் மனந் திரும்பவில்லையானால், தேவன் நம்மை கடுமையாகத் தண்டிப்பார்.

தேவன் நமக்கு எதிராக யுத்தம் செய்வார். நாம் எதை விதைத்தோமோ அதையே அறுப்போம். பரலோகத்தில் நித்திய இளைப்பாறுதலுக்குள் நாம் பிரவேசிக்க மாட்டோம்.

இரண்டாவதாக, பரிசுத்த ஆவியை நாம் துக்கப்படுத்தும் வேறு சில வழிகளை என்னோடு சேர்ந்துே படிக்க அழைக்கிறேன். இதைக் கற்றுக் கொள்வதின் நோக்கம், பரிசுத்த ஆவியை துக்கப்படுத்துவதை தவிர்ப்பது எப்படி என்பதைத் தெரிந்து கொள்வது தான். இந்த சொற்றொடர் இடம் பெற்றிருக்கும் எபேசியர் நான்காம் அதிகாரத்தைப் படிப்பதன் மூலம் இதைத் தெரிந்து கொள்வோம்.

இப்பொழுது **எபே.4:20-24** வசனப் பகுதியை வாசியுங்கள்.

இங்கே, தேவன் ஒரு காரியத்தை தெளிவாகச் சொல்லுகிறார். அது நானும், நீங்களும் மாற வேண்டுமென்பது, இதை பழைய மனிதனைக் களைந்து போடுவதின் மூலம் விளக்குகிறார். இதன் பொருள், நானும்,

நீங்களும் "**உண்மையான நீதியிலும், பரிசுத்தத்திலும்**" வாழ வேண்டுமென்று கேட்கிறார்.

பழைய மனிதனைக் களைந்து போட்டு, புதிய மனிதனைத் தரித்துக் கொள்ளும் இந்த மாற்றம் எப்பொழுது ஆரம்பமாகிறது?

நாம் **விசுவாசித்து** (அப் 18:8), **மனந்திரும்பி** (அப்.2:38), **இயேசுவில் நமது நம்பிக்கையை அறிக்கையிட்டு** (அப்.8:36,37). **புதிய ஆவிக்குரிய வாழ்க்கைக்காக** (கொலோ 2 : 12,13) **தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் பெறும் போது ஆரம்பமாகிறது.**

இதை உறுதி செய்து கொள்ளும் படியாக, ரோமர் 6 : 3-6 வசனங்களில், தேவன் எனக்கும் உங்களுக்கும் என்ன சொல்லுகிறார் என்பதை கவனியுங்கள்.

வசனம்-6ல், ரோமாபுரியிலே வாழ்ந்த கிறிஸ்தவர்களைப் பற்றி தேவன்,முக்கியமான சிலவற்றைச் சொல்லியுள்ளார். அவர்களுடைய பழைய மனிதன், "**அவருடனே கூட**", அதாவது இயேசுவுடனே கூட சிலுவையிலறையப்பட்டிருக்கிறான். இங்கே "**பழைய மனிதன்**", என்பது பழைய வாழ்க்கை முறையைத் தான் குறிக்கிறதென்பது தெளிவாக தெரிகிறது. ஆகையால், அவர்கள் பழைய வாழ்க்கையைச் சிலுவையிலறைந்து விட்டனர். இயேசுவுடனே கூட அதைச் செய்திருக்கிறார்கள். இனி ஒருபோதும் பாவத்திற்கு அடிமையாயிராதபடிக்கு அப்படிச் செய்திருக்கிறார்கள்.

இந்த வகையாக பழைய மனிதனைக் களைந்து போடுதலைக் குறித்து தான் தேவன் எபே.4:20-24ல் பேசுகிறார். அது எப்பொழுது நடந்தது என்பதைக் கண்டறிய, ஒரு மனிதன் எப்பொழுது, இயேசுவுடனே இணைக்கப்பட்டான் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

வசனம் 3-ல் ஒரு மனிதன் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படுகிறான் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, ஒருவனோ அல்லது ஒருத்தியோ, கிறிஸ்துவுக்குள்ளாகும்படி முறையாக ஞானஸ்நானம் பெறும் போது, முதலாவது கிறிஸ்துவுடனே கூட இணைக்கப்படுகிறான். ஆகையால், **பழைய மனுஷனைக் களைந்து போடுவதும், புதிய மனுஷனைத் தரித்துக் கொள்வதும் தண்ணீர் ஞானஸ்நானத்தின் மூலம் ஆரம்பமாகிறது!**

ஆனால் அது மாத்திரம் போதாது! மேலுமாக 3-ம் வசனத்தில். ஒருவன் ஞானஸ்நானம் பெறும்போது, கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறான் என தேவன் சொல்லுகிறார். அது ஏன் அவ்வளவு முக்கியமானது?

இயேசுவானவர் தன்னுடைய மரணத்தின் மூலம் இரத்தத்தைச் சிந்தியுள்ளபடியால் இது நித்திய காலத்திற்கும் முக்கியமானதாகிறது. நம்முடைய கடந்த காலப் பாவங்களைச் சுத்திகரிக்கும் வல்லமை கொண்டதாக அவருடைய இரத்தம் மாத்திரமே இருக்கிறது. (மத். 26:28)! ஆகவே, ஆத்துமாவைச் சுத்திகரிக்கும் இயேசுவின் இரத்தத்தின் மூலமாக நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரே வழி, அவருக்குள்ளாகவும், அவருடைய மரணத்துக்குள்ளாகவும் ஞானஸ்நானம் பண்ணப்படுவது தான்.

ஆகவே தான் இயேசுவானவர், **விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்** என்று சொல்லியுள்ளார் (மாற் 16 :16)! ஆகவே தான், இருதயம் குத்தப்பட்ட விசுவாசிகளுக்கு, நீங்கள் **மனந்திரும்பி,** ஒவ்வொருவரும் **பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்** என்று கட்டளையிடப்பட்டது. (அப்.2:38)! அதே காரணத்துக்காகத் தான். **எழுந்து உன் பாவங்கள் போகக் கழுவப்படு** என்று சவுலுக்குக் கட்டளை கொடுக்கப்பட்டது (அப்.22:16) இவைகள், அவன் ஏற்கனவே இயேசுவில் விசுவாசம் வைத்து, மூன்று நாள் ஜெபித்து, உபவாசமிருந்து தேவனுக்கேற்ற தனது துக்கத்தை வெளிப்படுத்தினதற்குப் பிறகே நடந்தது (அப்.9:8-11).

ரோமர் 6:4ல் மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தின் மூலம், ஒருவன் கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்படுகிறான் என்று தேவன் வெளிப்படுத்துகிறார். மீண்டுமாக, இது, நாம் முதலாவது தண்ணீர் ஞானஸ்நானத்தின் மூலம் கிறிஸ்துவுடனே கூட இணைக்கப்படுவதைக் குறிக்கிறது. அத்தோடு, "அடக்கம் பண்ணப்படுகிறோம்" என்ற வார்த்தையின் மூலம், வேறொன்றையும் தெளிவுபடுத்துகிறார். வேதாகம ஞானஸ்நானம் என்பது, தண்ணியில் முழுகுதலே (அடக்கம் பண்ணப்படுதல்) அல்லாமல் தெளித்தலோ, ஊற்றுதலோ அல்ல என்கிறார்!


ஆகையால், ஒருவன். தன்னுடைய கடந்த காலப் பாவங்களுக்காவும்,


மீறுதலுக்காகவும் மரிக்கும் படியாக தண்ணீர் ஞானஸ்நானத்துக்குள்ளாகப் போகிறான் (எபே 2:1) அதன் பின்பு. எப்படி. பிதாவானவர் மரணத்துக்குள்ளாக்கும் கல்லறையிலிருந்து கிறிஸ்துவை உயிரோடே எழுப்பினாரோ அதுபோல, ஆவிக்குரிய மரணத்திலிருந்து, ஆவிக்குரிய ஜீவனுக்காக, முறையான ஞானஸ்நானத்தின் மூலமாக தண்ணீருக்குள் அடக்கம் செய்கிறவர்களையும் தேவன் எழுப்புவார்! ஆகவே, அந்த மனிதன், புதிதான ஜீவனுள்ளவனாய் நடந்து கொள்ளும்படி, தண்ணீரிலிருந்து வெளியே வர முடியும். அந்த மனிதன் இப்பொழுது கிறிஸ்துவுக்குள்ளாய் இருக்கிறபடியால், "..... **அவன் புதிய சிருஷ்டியாயிருக்கிறான். பழையனவைகள் எல்லாம் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின.** "II கொரி 5 :17)! அவனோ அல்லது அவளோ! பழைய மனிதனைக் களைந்து போட்டு புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டாயிற்று. அவர்கள் எபே.4:20-24 தேவன் கட்டளையிட்டுள்ள மாற்றத்திற்கான வழிமுறைகளைத் தொடங்கியாயிற்று.

தேவன், அந்த மாற்றத்திற்கான வழிமுறைகளை நம்முடைய வாழ்வின் ஒவ்வொரு நாளிலும் தொடர வேண்டுமென்று விரும்புகிறார். உண்மையில், நாம் ஒவ்வொருவரும், கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசுக் கிறிஸ்துவின் கிருபையிலும், அவரை அறிகிற அறிவிலும் வளர வேண்டுமென்று கட்டளையிடுகிறார் (II பேது 3 ; 18) ஆகையால் ஆவிக்குரிய ரீதியில் வளர மறுப்போமானால், நாம் தேவனை துக்கப்படுத்துகிறோம்.

நீங்கள் பழைய மனிதனைக் களைந்து போட்டு புதிய மனிதனைத் தரித்துக் கொண்டீர்களா? நீங்கள் இயேசுவுக்குள்ளும், அவருடைய மரணத்துக்குள்ளும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு விட்டீர்களா? உங்களுடைய கடந்த காலப் பாவங்கள் கழுவப்பட வேண்டுமென்ற, குறிப்பிட்ட நோக்கத்திற்காக, தண்ணீருக்குள் முழுகி ஞானஸ்நானம் பெற்றுவிட்டீர்களா? இவைகளுக்கெல்லாம், உங்கள் பதில் இல்லை என்பதாக இருந்தால், நீங்கள் தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்துகிறீர்கள். தயவு செய்து, பாவமன்னிப்புக்காக, கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்படுவதன் மூலம், தேவனைத் துக்கப்படுத்துவதை நிறுத்துங்கள்!

**EZSR** **CHARLIE DI PALMA**


DON'T MISS IT
"BIBLE MEDITATION"
T.V. PROGRAMME
IN KARAN T.V.
Day : Every Sunday
Time : 1.00 pm to 1.30 p.m
(Only in Coimbatore, Tirupur & Erode)


கரன் டி.வி.யில்
திருமறை தியானம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி
திருமறை ஆசான் இதழின் ஆசிரியர்
திருமறை தியான நிகழ்ச்சியில்
நற்செய்திப் பேருரை ஆற்றுகிறார்.
நாள் : பிரதி ஞாயிறு
நேரம் : மதியம் 1.00 முதல் 1.30 வரை
(கோவை, திருப்பூர், ஈரோடு பட்டணங்களில் மட்டும்)
கண்டு, கேட்டு தேவ ஆசீர்வாதம் பெறுங்கள்.

# தேடி வந்த தெர்த்துல்லு

கிறிஸ்துவுக்குள் பிரியமான வாசகர் யாவருக்கும் நல் வாழ்த்துக்கள். தெர்த்துல்லு என்பவனைப் பற்றி உங்களுக்கு தெரியப்படுத்துவதில் அதிக ஆவலாய் இருக்கிறேன். தெர்த்துல்லு ஒரு நியாய சாஸ்திரி. அதாவது இன்றைய வழக்கறிஞர்தான் அன்றைய நியாய சாஸ்திரி. ஒரு மனிதனை வழக்கில் அவனை நல்லவன் என்றும், அல்லது அவனை குற்றவாளிதான் என்றும் வழக்கைத் தீர்த்து வைக்கும் ஒருவன் தான் இந்த தெர்த்துல்லு.

இவன் எருசலேமில் உள்ள ஒரு யூதன். இவன் நியாயப் பிரமாணத்தை நன்கு அறிந்த ஒரு நியாய சாஸ்திரி. பவுலின் ஊழிய நாட்களில் லீசியா பவுலை விசாரித்து, பிறகு செசாரியாவில் உள்ள பேலிக்ஸ் இடம் அனுப்பினான். பேலிக்ஸ், ஏரோது அரண்மனையில் பவுலை காவல் பண்ணும்படி கட்டளையிட்டான். "ஐந்து நாளைக்குப் பின்பு பிரதான ஆசாரியனாகிய அனனியா மூப்பர்களோடும், தெர்த்துல்லு என்னும் ஒரு நியாய சாதுரியனோடும் கூடப் போனான்; அவர்கள் பவுலுக்கு விரோதமாகத் தேசாதிபதியினிடத்தில் பிராதுபண்ணினார்கள்" (அப். 24 : 1) "அவன் அழைக்கப்பட்ட போது, தெர்த்துல்லு குற்றஞ்சாட்டத் தொடங்கி" (அப் : 24 : 2).

செசரியாவில் ஏரோது அரண்மனையில் இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்காக சிறையில் ஐந்து நாள் இருந்தபின்பு, 6ம் நாளிலே பவுலை விசாரிக்க பேலிக்ஸ் அழைத்த போது எருசலேமில் உள்ள பிரதான ஆசாரியன் அனனியா, மூப்பர்கள் நியாய சாஸ்திரி தெர்த்துல்லு பேலிக்ஸ்க்கு முன்பாக கூட்டங் கூடினார்கள். ஆம், சகோதரரே, உண்மைக் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக எத்தனை பேர் கூட்டம் கூடி பிராது செய்கின்றார்கள். அன்று பவுலை அப்படி செய்தார்கள். இன்றும் என்னையும் உங்களையும் செய்வார்கள். ஆனால் தேவன் நம் பட்சத்தில் நீதிபரராக இருக்கிறார்.

அந்த மாபெரும் கூட்டத்தில், எருசலேமில் இருந்து வந்த தெர்த்துல்லு பேலிக்ஸ் முன்பாக பேசுகிற வார்த்தைகளை கவனித்துப் பாருங்கள். பேலிக்ஸக்கு ஐஸ் வைக்கிறான் இந்த தெர்த்துல்லு, **"கனம் பொருந்திய பேலிக்ஸே உம்மாலே நாங்கள் மிகுந்த சமாதான சவுக்கியத்தை அனுபவிக்கிறதையும் உம்முடைய பராமரிப்பினாலே இந்தத் தேசத்தாருக்கு**

**சிறந்த நன்மைகள் நடக்கிறதையும் நாங்கள் எப்பொழுதும் எங்கும் மிகுந்த நன்றியறிதலுடனே அங்கிகாரம் பண்ணுகிறோம்**" (அப்.24 : 3) பேலிக்ஸை உயர்த்தி பேசுகிற விதத்தை பார்த்தால் "பேலிக்ஸே எங்களுக்கு நன்மையாக தீர்ப்புச் செய்யும்" என்பதைப் போல நயவசனிப்போடு பேசுகிறான். தெர்த்துல்லுவின் நயவசனிப்பு தேவனுக்கு முன்பாக பலிக்காது. பவுலைக் குறித்து குற்றம் சாட்டும் போது "**என்னவென்றால், இந்த மனுஷன் கொள்ளை நோயாகவும், பூச்சக்கரத்திலுள்ள சகல யூதர்களுக்கும் கலகம் எழுப்புகிறவனாகவும், நசரேயருடைய மதபேதத்துக்கு முதலாளியாகவும் இருக்கிறானென்று கண்டறிந்தோம்**" (அப். 24 : 5) என்கிறான்.

பவுல் தெர்த்துல்லுவின் பார்வையில் கொள்ளை நோய்க்காரன், அதாவது அவன் மூலமாய் இயேசு கிறிஸ்துவை போதிக்கப்படுகிறதை கொள்ளை நோய் என்கிறான். அடுத்தபடியாக, கலகக்காரன் யூதர்களிடத்தில் இயேசு உயிர்த்தெழுந்தார் அவர் தேவனுடைய குமாரன் என்று கலகம் செய்து திரிகிறவன். மேலும், மதபேதக முதலாளி நசரேசயாகிய இயேசுவை தேவன் எழுப்பினார் என்று சொல்லுகிறபடியால் மதபேதக முதலாளி என்ற குற்றச் சாட்டுக்களையும், இவன் தேவலாயத்தை தீட்டுப்படுத்தப் பார்த்தான். வேதப் பிரமாணத்துக்கு புறம்பாக பேசினான் என்ற குற்றச் சாட்டுக்களையும் அறிவித்தான்.

என் அருமை வாசகரே, கிறிஸ்தவர்களுக்கு வரும் துன்பங்கள் அநேகம், நம்மை கிறிஸ்துவின் நாமத்திற்காக துன்பப்படுத்தி, இப்படிப்பட்ட குற்றங்களைச் சாட்டுகிற போது நீங்கள் எப்படி இருப்பீர்கள்? சிந்தித்துப் பாருங்கள். சோர்ந்து போகிறவனை அவர் நீதியின் வலது கரத்தாலே தாங்குவார். தேவ பிள்ளைகளுக்கு விரோதமாக அரசாங்கமும், அதிகாரிகளும் நம் இன ஜன மக்களும் நம்மை ஒருங்கே சூழ்ந்து எதிர்த்து நின்றாலும், தீர்ப்பு நீதியின் பக்கமே. நீதியின் தேவன் நம்பக்கமே.

"**உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும் அது உன்னை அணுகாது**" (சங்.91 : 7)

பவுலைப் போல அதிகாரிகளுக்கு முன்பாக நிற்க எனக்கும் ஒரு வாய்ப்பு கிடைக்காதா என்ற எண்ணமே எனக்கு தோன்றுகிறது. ஏனென்றால், நம்மேல் குற்றம் சுமத்துவோருக்கு நாம் இரட்சிப்பின் சுவிசேஷத்தை கூற இது ஒரு நல்ல சந்தர்ப்பம் தானே.

**"சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு. எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்லு"** (2. தீமோ.4:2).

திருவசனத்தை பிரசங்கம் பண்ண பவுலுக்கு நல்ல தருணம் கிடைத்தது. பவுல் பேசும்படி தேசாதிபதி சைகை காட்டினபோது அவன் உரத்த சத்தமாய் நான் என் காரியங்களை குறித்து அதிக தைரியத்தோடு நியாயாதிபதியாக உமக்கு முன்பாக உத்தரவு சொல்லுகிறேனென்று ஆரம்பிக்கிறார். பவுல் ஒருபோதும் திகைத்து நிற்கவில்லை தெளிந்த புத்தியுள்ளவனாய் தைரியத்தோடு பேசுகிறவனாய் காணப்பட்டான்.

**"அவர்களுக்கும் புறஜாதியாருக்கும் சாட்சியாக என்னிமித்தம் அதிபதிகளுக்கு முன்பாகவும் ராஜாக்களுக்கு முன்பாகவும் கொண்டு போகப்படுவீர்கள். அவர்கள் உங்களை ஒப்புக் கொடுக்கும் போது, எப்படிப் பேசுவோம் என்றும், என்னத்தைப் பேசுவோம் என்றும் கவலைப் படாதிருங்கள்; நீங்கள் பேசவேண்டுவது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும்"** (மத். 10 : 18-19).

**"பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்** (மத். 10 : 20) பேசுவதற்கு ஒருவேளை நமக்கு ஞானமில்லாமலிருந்தாலும் நமக்குள் வாசம் பண்ணுகிற பரிசுத்தி ஆவியானவர் பேசுவதற்கான அறிவைக் கொடுக்கிறார். அப்போஸ்தலர் 24 : 11-23 வரை வாசித்துப் பாருங்கள். பவுலின் உரையில் பேலிக்ஸ் எல்லாவற்றையும் புரிந்து கொண்டவனாய் எந்த தீர்ப்பையும் செய்யாமல் தள்ளிப் போடுவதை பார்க்கிறோம். என் அருமை வாசகரே, **"உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்"** (ஏசா.54:17) என்ற இவ்வசனத்தின்படி தொர்த்துல்லுவின் குற்றச்சாட்டுகள் எல்லாம் மண்ணுக்கு மண்ணாகபோனது. பவுலை குற்றப்படுத்த வேண்டும் என்று தேடிவந்த தொர்த்துல்லுகள் வெட்கப்பட்டு போவார்களாக, இன்னமும் அநேக தொர்த்துல்லுகள் நம்மை குற்றப்படுத்த தேடி வந்தாலும், தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? தேவன் நம்மோடு இருக்கிறார். தேவ கிருபை நம்மோடிருப்பதாக!

**L. மனாசே**
சித்தூர் (AP)

## நடப்புச் செய்திகள்

❖ உச்ச நீதி மன்றத் தீர்ப்பினால் ஒரு வழியாக அரசு ஊழியர்களின் பிரச்சினை ஓரளவு முடிவுக்கு வந்தது.

❖ குஜராத் "பெஸ்ட் பேக்கரி" வழக்கு விவகாரம் மீண்டும் விசுவ ரூபமெடுத்திருக்கிறது.

❖ இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் குழு நல்லெண்ணப் பயணமாக பாகிஸ்தான் சென்றிருக்கிறது.

❖ அயோத்தி ராமர் கோயில் விவகாரத்தில் பாரதப் பிரதமரின் நிலை பரிதாபமாக உள்ளது.

❖ அனைவருக்கும் பொது சிவில் சட்டம் என்பதை மைனாரிட்டிகள் அச்ச உணர்வுடன் பார்க்கிறார்கள்.

❖ மத்திய அரசுக்குச் சொந்தமான எண்ணெய் கம்பெனி அதிகாரிகள் 25 பேர் ஹெலிகாப்டர் விபத்தில் சிக்கி நடுக்கடலில் மரணம்.

❖ குஜராத் முதல்வர் நரேந்திர மோடியின் கோவை விஜயம், மாநகர போலீஸார் நிம்மதி பெருமூச்சு விடும்படியாக நடந்து முடிந்தது.


❖ இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சுனில் கவாஸ்கர், கிரிக்கெட் விளையாட்டில் ஒழுங்கீனங்கள் அதிகரித்து வருவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

## கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்

கும்பகோணம் கிறிஸ்துவின் சபை ஊழியரும், அநேகருடைய அன்புக்கு பாத்திரருமான சகோதரன் **ஜேம்ஸ் இளங்கோவன்** அவர்கள், கடந்த சனி (9-8-2003) இரவு, பரம இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்.

அவருடை மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுக்காக நம்முடைய ஜெபங்களில் நினைவு கூறுவோமாக

**- ஆசிரியர்**



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 - 9.00 p.m.<br>9.00 - 9.15 p.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sun, Mon<br>Tue, Thu | 2.00 - 2.15 p.m. | Box. 80<br>Kakinada - 533001 | Joshua Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit College,<br>Trivandrum - 695 034 | P.K. Varghese |



***Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WPP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi
Annual Subscription Rs. 30/-

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த
வேதாகமத்தை முறையாகக் கற்றுக்
கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட

## ஓர் இலவசப் பயிற்சி

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு
சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்,
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,
த.பெ.எண்-27, காங்கேயம்-638 701.
தமிழ்நாடு. இந்தியா.

Published by Church of Christ, Kangayam
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : S. Rajanayagam

DESIGNED BY SAHUDAA ERODE © 2254004